*a PI India initiative*

PARLIAMENTARIANS WITH INNOVATORS FOR INDIA

# கோவிட்-19 தடுப்பூசிகள் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்





**எந்தெந்த கோவிட்-19 தடுப்பூசிகளுக்கு இந்தியாவில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது?**

அவசர காலத்தில் பயன்படுத்தும் வகையில் இரண்டு தடுப்பூசிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அங்கீகாரத்தை வழங்கியது 'மத்திய மருந்துகள் தரம் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு (சி.டி.எஸ்.சி.ஓ)' ஆகும். இவற்றில் முதலாவது கோவிஷீல்டு®. அஸ்ட்ராஜெனிகாவின் தடுப்பூசியாகிய இதைத் தயாரித்திருப்பது இந்திய சீரம் நிறுவனம். இரண்டாவது கோவேக்சின்®. இந்தத் தடுப்பூசியை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ஐ.சி.எம்.ஆர்) மற்றும் தேசிய தீநுண்மியியல் ஆய்வு நிறுவனம் (என்.ஐ.வி) ஆகியவற்றுடன் இணைந்து பாரத் பயோடெக் லிமிடெட் தயாரித்திருக்கிறது. ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி கோவிட்-19 தடுப்பூசியும் சமீபத்தில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதல் தவணையாக ஸ்புட்னிக் வி தடுப்பூசி மே முதல் தேதியன்று இந்தியா வந்து வந்து சேர்ந்தது.

*ஆதாரம்: இந்திய அரசு சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் அமைச்சகம், கோவிஷீல்டு தகவல் தாள், கோவேக்சின் தகவல் தாள், ஸ்புட்னிக் வி தகவல் குறிப்பு*

**பல தடுப்பூசிகள் இருக்கும்போது கோவிஷீல்டு மற்றும் கோவேக்சின் தடுப்பூசிகளை மட்டும் பயன்படுத்தலாம் என்று இந்தியா தேர்ந்தெடுக்க காரணம் என்ன?**

நமது நாட்டிலுள்ள மருந்துகள் உபயோகத்தை முறைப்படுத்தும் ஆணையத்தைச் சேர்ந்தவர்கள் இந்த இரண்டு தடுப்பூசிகளையும் மனிதர் உடலில் செலுத்தி இவை பாதுகாப்பானவையா, செயல்திறன் கொண்டவையா என சோதனை செய்து பார்த்த பிறகே இவ்விரண்டு தடுப்பூசிகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இதனால், நம் நாட்டில் பயன்படுத்த அனுமதிக்கப்படும் எல்லா கோவிட்-19 தடுப்பூசிகளும் போதுமான அளவு பாதுகாப்பானவையும், செயல்திறன் கொண்டவையுமாயும் இருக்கிறது. கோவிஷீல்டு தடுப்பூசிக்கு நாற்பது நாடுகளில் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். கோவேக்சின் தடுப்பூசி ஒன்பது நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

*ஆதாரம்: கோவிட்-19 பின் தொடர்ந்த கவனிப்பு (ட்ரேக்கர்)*

**தடுப்பூசி போட்டுக் கொள்வதால் கோவிட்-19 தொற்று ஏற்படுவதைத் தடுக்க முடியுமா?**

கோவிட்-19 தொற்று ஏற்படுவதற்குக் காரணம் கொரோனா என்னும் தீநுண்மி (வைரஸ்) தான். இந்தத் தீநுண்மியின் ஒவ்வொரு துகளிலும் புரத முட்கள் இருக்கின்றன. இந்த தீநுண்மிகளின் புரத முட்கள் நமது உடல் திசுக்களோடு ஒட்டிக்கொண்டு நோயை உண்டாக்குகின்றன. இந்த புரத முட்களை அடையாளம்

கண்டு அவைகளை கொண்டிருக்கும் தீநுண்மிகளையெல்லாம் அழிக்கும் வகையில் தற்போது சில கோவிட்-19 தடுப்பூசிகள் தயாரிக்கப்படுகின்றன.

நல்ல செயல்திறன் கொண்ட ஒரு தடுப்பூசி போட்டுக் கொண்ட ஒருவரை கொரோனா தீநுண்மி தாக்கும்போது அவருக்கு கோவிட்-19 தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும். ஒரு தடுப்பூசி, நோய் தாக்குதலிலிருந்து, மருத்துவமனைக்குப் போவதிலிருந்து,, மரணத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறதா என்பவைகள் தான் இங்கு முக்கியமாகக் கருதப்படவேண்டிய விஷயங்கள். இந்த வகையில் இப்போது கிடைக்கும் இரண்டு தடுப்பூசிகளுமே கோவிட்-19 மூலம் ஏற்படும் இறப்பு மற்றும் மேற்கூறிய சிக்கல்களிலிருந்து நம்மைக் காப்பாற்றும் சக்தி கொண்டவை. இந்தத் தடுப்பூசியை பெரும்பான்மையான மக்களுக்கு செலுத்துவதன் மூலம் கொரோனா தீநுண்மி மேலும் பரவுவதையும், சமூகமாக வாழும் மக்கள் கூட்டத்திற்கு பரவ விடாமல் கட்டுப்படுத்தவும், மேலும் இந்தத் தீநுண்மி வேறு வடிவங்கள் எடுத்துப் பெருகுவதையும் குறைக்க முடியும்.

*ஆதாரம்: ஜான்ஸ் ஹாப்கின்ஸ் மருத்துவம்*

**இந்தத் தடுப்பூசிகள் எந்த அளவுக்குப் பயனுடையதாக இருக்கும்?**

உலகளாவிய தகவல்களின்படி பார்த்தால் கோவிஷீல்டு தடுப்பூசி 70 சதவீதம் செயல்திறன் கொண்டது. கோவேக்சின் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் போட்டுக்கொண்டவருக்கு, அவருக்கு ஏற்கனவே தொற்று எதுவும் இல்லாமலிருந்தால், அவருக்கு கோவிட்-19 தொற்று ஏற்படாமலிருப்பதற்கான தற்போதைய செயல்திறனாக 78 சதவீதம் என்று நிரூபணமாகியிருக்கிறது. புதிதாக அறிமுகமாகியிருக்கும் ஸ்புட்னிக் வி தடுப்பூசி 91.6 சதவீதம் செயல்திறன் கொண்டது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகள் அசாதாரமான அளவில் செயல்திறன் கொண்டவையாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உதாரணமாக, ஃப்ளூ காய்ச்சலுக்கு நாம் போட்டுக்கொள்ளும் தடுப்பூசி 40-60 சதவீதம் செயல்திறன் கொண்டவை. இருப்பினும் ஒவ்வொரு வருடமும் அதன் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. 50 சதவீதத்திற்கு மேலான செயல்திறன் கொண்ட ஒரு தடுப்பூசி ஒரு பெருந்தொற்று பரவுவதைத் தடுக்க போதுமானது என்று கருதப்படுகின்றது.

*ஆதாரம்: கோவிஷீல்டு தகவல் தாள், கோவேக்சின் தகவல் தாள், ஸ்புட்னிக் வி அறிவிப்புகள், ஜி.ஏ.வி.ஐ மற்றும் எஃப்.டி.ஏ*

**கோவிட் தடுப்பூசிகள் எந்த அளவுக்குப் பயனுள்ளவை?**

மூன்றாம் கட்ட சோதனை முடிவுகளின் மூலம் கிடைத்த இடைக்கால தகவல்களின்படி கோவிட்-19 தடுப்பூசிகளும் அவைகளின் செயல்திறனும்

| **தயாரிப்பு நிறுவனம்/ தடுப்பூசி** | **செயல்திறன்** |
|---|---|
| ஃபைசர் - | 95% |
| மாடெர்னா | 94% |
| ஸ்புட்னிக் வி | 92% |
| நோவோவேக்ஸ் | 89% |
| கோவேக்சின்* | 78% |
| ஆக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஜெனெகா | 70% |
| கொரோனாவேக் | 50% |

ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா

[தடுப்பூசியின் செயல்திறன் மற்றும் செயல்திறனுக்கான வித்தியாசத்தை அறிந்து கொள்ளுங்கள்]

**தடுப்பூசி போட்டுக் கொண்ட பின்னரும் தொற்று ஏற்படுகிறது. எனவே தடுப்பூசி போட்டுக்கொள்வதினால் என்ன பயன்?**

தடுப்பூசி போட்டுக்கொண்ட பின்னர் ஏற்படும் தொற்றை ‘திருப்புமுனைத் தொற்று’ என்று குறிப்பிடுகின்றனர். தடுப்பூசிகளை முழுமையாகச் செலுத்திக்கொண்ட பின்னர் தொற்று ஏற்படுவது மிகவும் அரிதாகவே நிகழ்கிறது. அத்தகைய மறு தொற்றுகள் இந்தியாவில் வெறும் 0.04% அளவிலேயே நிகழ்ந்திருக்கின்றன. முதல் டோஸ் தடுப்பூசி கொண்ட 10.03 கோடி ஜனங்களில் 17,145 பேருக்கு மட்டுமே மறு தொற்று ஏற்பட்டிருக்கிறது என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் கூறுகிறது. மொத்த எண்ணிக்கையில் இது 0.02% மட்டுமே. இரண்டாவது டோஸும் போட்டுக்கொண்ட 1.57 கோடிப்பேரில் 5,014 பேருக்கு மறு தொற்று ஏற்பட்டிருக்கிறது. இது வெறும் 0.03% மட்டுமேயாகும்.

இதுவரை 1.1 கோடிப்பேர் கோவேக்சின் தடுப்பூசி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதல் டோஸ் போட்டுக்கொண்ட 93.56 லட்சம் பேர்களில் 4,208 பேருக்கு மறு தொற்று ஏற்பட்டிருக்கிறது. மொத்த எண்ணிக்கையில் இது 0.04% ஆகும். இரண்டாவது டோஸ்

போட்டுக்கொண்ட 17.37 லட்சம் பேர்களில் வெறும் 695 பேர்களுக்கு மட்டுமே மறு தொற்று ஏற்பட்டிருக்கிறது. இதுவும் 0.04% மட்டுமே ஆகும்.

மறு தொற்று ஏற்பட்டவர்களில் பெரும்பாலானோர் முன்களப்பணியாளர்களும், சுகாதாரத்துறை பணியாளர்களுமே. நோயாளிகளுக்கிடையிலேயே பணியாற்றிக்கொண்டிருப்பதால் அவர்களுக்கு மறு தொற்று ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்*

**மற்ற நாடுகளில் செலுத்தப்படும் தடுப்பூசிகள் அளவுக்கு இந்தியாவில் செலுத்தப்படும் தடுப்பூசிகள் சக்தி வாய்ந்தவையா?**

ஆமாம். மற்ற எந்த நாட்டிலும் பயன்படுத்தப்படும் கோவிட் தடுப்பூசிகள் அளவுக்கு இந்தியாவில் பயன்படுத்தப்படும் தடுப்பூசிகளும் பயனுள்ளவையே. இந்தத் தடுப்பூசிகளின் பாதுகாப்பும், பயன்பாடும் பற்றி பல கட்ட சோதனைகளை நடத்திய பின்னரே அவை அறிமுகப்படுத்தப்பட்டன. கோவிஷீல்டு தடுப்பூசி 40 நாடுகளிலும், கோவேக்சின் 9 நாடுகளிலும் அங்கீகாரம் பெற்றிருக்கின்றன.

*ஆதாரம்: கோவிட்-19 பின் தொடர் கவனிப்பு ( ட்ராக்கர்)*

**கோவிட்-19 தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படுகிற அல்லது உறுதி செய்யப்பட்டிருக்கிற ஒரு நபர் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாமா?**

கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.இ.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி எந்த ஒரு நபருக்கும் சார்ஸ் கோவி-2 (கோவிட்-19) தொற்று ஏற்பட்டிருப்பதாக சோதனை முடிவுகளின்படி தெரிய வந்திருந்தால் அவர் தடுப்பூசியை முழுமையாக குணமடைந்த பிறகு மூன்று மாத காலம் கழித்து போட்டுக் கொள்ள வேண்டும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், உலக சுகாதார அமைப்பு, கோவிட்-19 தடுப்பூசி குறித்த வல்லுநர் குழுவின் பரிந்துரைகள் பற்றிய பி.ஐ.பி செய்திக்குறிப்பு*

**தடுப்பூசி போட்டுக்கொண்ட பின்னரும் முகக்கவசம் அணிவது உட்பட கோவிட்-19 தொற்றுக்கான முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமா?**

ஆமாம். கோவிட்-19 தொற்று காரணமாக ஏற்படும் தீவிரமான நோய்த்தாக்குதலிருந்தும், இறப்பிலிருந்தும் தடுப்பூசி உங்களைக் காக்கிறது. தடுப்பூசி போட்டுக்கொண்ட முதல் பதினான்கு நாட்களுக்குப் பிறகு தான் அது செயல்பட தொடங்கும். தடுப்பூசிகளில் இரண்டு வகைகள் உள்ளது. ஒரு டோஸ் தடுப்பூசி மற்றும் இரண்டு டோஸ் தடுப்பூசி. பொதுவாக, ஒரு டோஸ் மட்டுமான தடுப்பூசியாக இருந்தால் ஊசி போட்டுக்கொண்ட இரண்டு வாரங்களுக்குப் பிறகு தான் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகத்தொடங்கும். இரண்டு-டோஸ் தடுப்பூசியாக இருக்கும் பட்சத்தில் இரண்டு டோஸ்களும் போட்டுக் கொண்ட பிறகு தான் முழுமையான நோய் எதிர்ப்பு சக்தி சாத்தியமாகும்.

கடுமையான நோய்த்தாக்குதலிலிருந்தும், இறப்பிலிருந்தும் கோவிட்-19 தடுப்பூசி உங்களைப் பாதுகாக்கும். ஆனால் மேலும் எந்த அளவுக்கு உங்களுக்குத் தொற்று ஏற்படாமலிருப்பதற்கும், உங்களிடமிருந்து அடுத்தவருக்குத் தொற்றுப் பரவாமலிருப்பதற்கும் இந்தத் தடுப்பூசி உதவும் என இதுவரையிலும் தெரியாது.

எனவே கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொண்ட பின்னரும் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல், சேனிடைசர்கள் கொண்டு கையை சுத்தம் செய்தல் போன்ற முன்னெச்சரிக்கைகளைக் கடைப்பிடிப்பது மிக மிக அவசியம். இது தொற்றுப் பரவுவதிலிருந்து நம்மையும், நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் பாதுகாக்கும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் மற்றும் உலக சுகாதார நிறுவனம்*

**தடுப்பூசிக்குப் பிறகு நான் எவ்வளவு காலம் பாதுகாப்பாக இருப்பேன்?**

கோவிட் தடுப்பூசிகள் சில மாதங்களுக்கு முன்பு தான் புழக்கத்திற்கு வந்திருக்கின்றன. எனவே அவை தரும் பாதுகாப்பு எத்தனை நாளைக்கு இருக்கும் என்று இப்போதைக்கு சொல்ல முடியாது. இது பற்றிய ஆராய்ச்சிகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இருப்பினும் இப்போதைக்கு நமக்குக் கிடைக்கும் தகவல்களின் படி கோவிட்-19 தாக்குதலிலிருந்து மீண்டவர்கள் நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கிறார்கள். மீண்டும் தொற்று ஏற்படாமலிருக்க அவர்களுக்கு கொஞ்ச காலத்திற்காவது பாதுகாப்புக் கிடைக்கிறது. இந்தப் பாதுகாப்பு எத்தனை வலுவானது, எத்தனை நாள் நீடித்து நிற்கும் என்பவை பற்றி இன்னும் முழுமையான விவரங்கள் இல்லை. எனவே நமது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான முகக்கவசம் அணிதல், கை கழுவுதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் போன்ற பழக்கங்களைத் தொடர்ந்து மேற்கொள்வது மிக மிக அவசியமானது.

*ஆதாரம்: [இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்]() மற்றும் [உலக சுகாதார நிறுவனம்]()*

**சார்ஸ்-கோவி2 (கொரோனா தீநுண்மி) களின் புதிய வடிவங்கள், உருமாறிய வடிவங்கள் தோன்றுமானால் அவற்றிலிருந்து தடுப்பூசி என்னை பாதுகாக்குமா?**

கோவிட்-19 தடுப்பூசிகள் கொரோனா தீநுண்மி(வைரஸ்)யின் புதிய வடிவங்களிலிருந்து போதுமான பாதுகாப்பு தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் கடுமையான நோய் தாக்குதல் மற்றும் மரணம் நேர்தல் என்பவற்றிலிருந்து நம்மைக் காக்கும் சக்தி அதற்கு இருக்கிறது. தீநுண்மிகள் எத்தகைய உருமாற்றம் கொண்டாலும் இந்தத் தடுப்பூசிகளை முற்றிலுமாக செயலிழக்கச் செய்ய முடியாமல் இருக்க அடிப்படையில் இந்தத் தடுப்பூசிகள் பரவலான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும் வகையில் தயாரிக்கப்படுகின்றன. எனவே எல்லாத்தடுப்பூசிகளும் உருமாறி வரும் தீநுண்மிகளிடமிருந்தும் போதுமான பாதுகாப்பை தரும் என்று எதிர்பார்க்கலாம். இப்போது கிடைக்கும் தகவல்களின்படி உருமாறி வரும் தீநுண்மிகள் தடுப்பூசிகள் தரும் பாதுகாப்புக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்று அறிகிறோம்.

அப்படியே உருமாறி வரும் தீநுண்மிகளால் இந்தத் தடுப்பூசிகளின் செயல்பாடு சற்றுக்குறையுமானால் தடுப்பூசிகளின் கலவையில் மாற்றங்களைக் கொண்டுவந்து மாறிவரும் தீநுண்மிகளுக்கு எதிராகப் பாதுகாப்பு தரும் அளவுக்கு மாற்றலாம். கோவிட்-19 தீநுண்மியின் உருமாறிவரும் வடிவங்கள் பற்றிய தரவுகள் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு வருகின்றன

*ஆதாரம்: [உலக சுகாதார நிறுவனம்]()*

**தடுப்பூசி போட்டுக்கொண்டபிறகு போதுமான அளவு நோய் எதிர்ப்பு சக்தி உருவாக எத்தனை நாட்கள் பிடிக்கும்?**

கோவிஷீல்டு அல்லது கோவேக்சின் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் போட்டுக்கொண்ட இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு பின்னரே போதுமான நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும்.

*ஆதாரம்: [இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்](), [கோவிஷீல்ட் தகவல் தாள்](), [கோவேக்சின் தகவல் தாள்](), [ஸ்புட்னிக் வி தகவல் குறிப்பு]()*

**கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் மது அருந்துவதைத் தவிர்க்க வேண்டுமா?**

நிபுணர்களின் கூற்றுப்படி, தடுப்பூசியின் செயல்திறனை மது அருந்துதல் பாதிக்கும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்*

**முதல் டோஸ் போட்டுக்கொண்ட அதே தடுப்பூசியைத்தான் இரண்டாம் டோஸுக்கும் போட்டுக்கொள்ள வேண்டுமா?**

இப்போது கிடைக்கும் தடுப்பூசிகள் மாற்றத்தகுந்தவையல்ல. முதல் டோஸ் போட்டுக்கொண்ட அதே தடுப்பூசியை இரண்டாவது டோஸாகவும் போட்டுக் கொள்வது மிகவும் முக்கியம். ஒரே வகையான தடுப்பூசியைத்தான் இரண்டாவது டோஸாகவும் போட்டுக்கொள்கிறோம் என்பதை உறுதி செய்வதற்கு கோ-வின் என்னும் தகவல் தளம் உதவும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் மற்றும் உலக சுகாதார நிறுவனம்*

**ஒரு குழு அல்லது ஒரு கூட்டத்தில் ஒரு சிலர் மட்டும் தடுப்பூசி போட்டுக்கொண்டால் அது குழுவிலுள்ள பிறருக்கும் நோய் எதிர்ப்பு சக்தியைத் தருமா?**

தடுப்பூசி போட்டுக் கொள்ளும் ஒருவர் நோயின் தாக்கத்தில் இருந்து தன்னைக் காத்துக் கொள்ள முடியும். அதேசமயம் தடுப்பூசியை ஒரே சமயத்தில் எல்லோராலும் போட்டுக் கொள்ள முடியாது. பெரும்பான்மையான எண்ணிக்கையில் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் மத்தியில் தடுப்பூசிப் போட்டுக் கொள்ளாத சிலர் வசிக்கிறார்கள் என்றால் அவர்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு இவர்களுக்கும் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. தடுப்பூசி போட்டுக் கொண்டு நோய் எதிர்ப்பு சக்தி பெற்ற பெரும்பான்மையினர் மத்தியில் நுழைவது/பரவுவது என்பது தீநுண்மிக்கு மிகவும் கடினம். எனவே தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் கூட பெரும்பான்மையாக தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் மத்தியில் வசிக்க நேர்ந்தால் அவர்களை நோய்க்கிருமிகள் தாக்குவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு. இப்படி ஒரு மக்கள் கூட்டமே பாதுகாக்கப்படுவது 'மந்தை அளவு நோய் எதிர்ப்பு சக்தி ' என்று அழைக்கப்படுகிறது. இந்த 'மந்தை அளவு நோய் எதிர்ப்பு சக்தி' கிடைக்கவேண்டும் என்றால் எத்தனை சதவீத நபர்களுக்கு தடுப்பூசி போடப்படவேண்டும் என்பது அந்தந்த நோயைப் பொறுத்து மாறுபடும். உதாரணமாக தட்டம்மை நோய்க்கு இது 95 சதவீதமாக இருக்கிறது. கோவிட்-19 தொற்றுக்கு 'மந்தை

அளவு நோய் எதிர்ப்பு சக்தி' உருவாக வேண்டுமானால் எத்தனை சதவீத மக்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய தகவல் ஏதும் இல்லை.

தடுப்பூசி உங்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் தடுப்பூசி போட்டுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்காத உங்கள் சமூகத்தில் வசிக்கிற பிறரையும் பாதுகாக்கிறது.

*ஆதாரம்: உலக சுகாதார நிறுவனம்*

**இப்போது கிடைக்கும் தடுப்பூசிகளுக்கிடையிலுள்ள வேறுபாடுகள் என்னென்ன? எந்தத் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளலாம்?**

| **விவரம்** | **கோவிஷீல்ட்®** | **கோவாக்சின்®** | **ஸ்புட்னிக் வி®** |
|---|---|---|---|
| உருவாக்கியவர்கள் | ஆக்ஸ்போர்டு-அஸ்ட்ராஜெனிகாவால் உருவாக்கப்பட்டு இந்தியாவில் உள்ள சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா (எஸ்ஐஐ) நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படுகிறது. | ஹைதராபாத்திலுள்ள பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனம் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ஐசிஎம்ஆர்) மற்றும் தேசிய தீநுண்மியியல் ஆய்வு நிறுவனம் (என்ஐவி) ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டது. | ரஷ்ய அரசு நிறுவனமான கமாலியா தொற்றுநோயியல் மற்றும் நுண்ணுயிரியல் தேசிய ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட்டது.<br><br>டாக்டர் ரெட்டி லெபாரெட்டரீஸ் நிறுவனம் இந்தியாவில் இதைத் தயாரிக்கும் |
| **தடுப்பூசியின் வகை** | சாடோக்ஸ்1 என்கோவி-19 கொரோனா வைரஸ் தடுப்பூசி) (மறுசேர்க்கை) | முழு-விரியான் செயலிழக்கப்பட்ட வெரோ செல்-பெறப்பட்ட தொழில்நுட்பம் | அடினோவைரல் வெக்டார் அடிப்படையிலான தடுப்பூசி. |

| | | | |
|---|---|---|---|
| | | .<br>. | இந்த தடுப்பூசி சற்று வேறுபட்ட உட் கூறுகளைக் கொண்ட இரண்டு டோஸ்களைக்கொண்டது. இது செரோடைப் 26 (ஆர்ஏடி26) என்பது முதல் டோசிலும் செரோடைப் 5 (ஆர்ஏடி 5) இரண்டாவது டோசிலும் பயன்படுத்தப்படுகிறது. |
| ஊசியை எப்படி செலுத்துகிறார்கள் ? | தசை வழியாக | தசை வழியாக | தசை வழியாக |
| மருந்தின் அளவு | 0.5 மி.லி | 0.5 மி.லி | 0.5 மி.லி |
| ஊசி போடுவதற்கான கால அட்டவணை | 2 டோஸ்கள்.<br>முதல் டோஸ் போட்டு 12 முதல் 16 வாரங்கள் (84 நாட்கள்) கழித்து இரண்டாவது டோஸ் போட்டுக்கொள்ள வேண்டும் | 2 டோஸ்கள்.<br>முதல் டோஸ் போட்டு 4 முதல் 8 வாரங்கள், கழித்து இரண்டாவது டோஸ் போடலாம். 6 முதல் 8 வாரங்கள் இடைவெளி இருக்குமானால் பாதுகாப்பு இன்னும் கூடுதலாக இருக்கும். | 2 டோஸ்கள்.<br>முதல் டோஸ் போட்டு 21 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது டோஸ் போட்டுக்கொள்ளலாம். |

| | | | |
|---|---|---|---|
| தடுப்பூசிகளைப் பத்திரப்படுத்தும் முறை | இந்த மூன்று தடுப்பூசிகளையும் குளிர்சாதன பெட்டியில் 2-8 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் பத்திரப்படுத்தி வைக்கலாம். இந்திய சீதோஷ்ண நிலையைக் கருத்தில் கொண்டு தடுப்பூசிகள் பெரும்பாலும் இந்த டெம்பரேச்சர் அளவில் தான் வைக்கப்படுகின்றன. தடுப்பூசிகளை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும், சரியான முறையில் பத்திரப்படுத்துவதற்கும் இது உதவுகிறது | | |
| செயல்திறன் | உலகளாவிய அறிக்கைகளின்படி 70% செயல்திறன் | 78% இடைக்கால செயல்திறன் | 91.6% செயல்திறன் |
| தடுப்பூசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அங்கீகாரம் | அவசர சூழ்நிலைகளுக்குத் தகுந்தபடி சில நிபந்தனைகளுடன் பயன்படுத்த அனுமதி | சோதனை முறையாக சில நிபந்தனைகளுடன் பயன்படுத்த அனுமதி | அவசர சூழ்நிலையில் சில நிபந்தனைகளுடன் பயன்படுத்த அனுமதி |
| | மருந்தகங்களில் இந்தத் தடுப்பூசிகளை விற்பதற்கு இந்திய அரசின் மருந்துக்கட்டுப்பாட்டு ஆணையர் (டிஜிசிஐ) இதுவரை அனுமதி தரவில்லை | | |
| தடுப்பூசியின் விலை நிர்ணயம் | மத்திய அரசு இரண்டு தடுப்பூசிகளையும் ஒரு டோசுக்கு ரூபாய் 150 என்ற விலையில் கொள்முதல் செய்து அரசு மருத்துவ மனைகளுக்கு இலவசமாக வழங்குகிறது.<br><br>ஏப்ரல் 21அன்று, சீரம் நிறுவனம் அதன் தடுப்பூசியான கோவிஷீல்டின் விலையை மாநில அரசுகளுக்கு ₹400 என்றும், தனியார் மருத்துவமனைகளுக்கு ₹600 என்றும் நிர்ணயித்தது.<br><br>ஏப்ரில் 25 நிலவரத்தின் படி பாரத் பயோடெக் நிறுவனம் கோவேக்சின் தடுப்பூசியை மாநில அரசுகளுக்கு ஒரு டோஸுக்கு ₹600 ஆகவும், தனியார் | | அதிகபட்ச சில்லறை விலை ₹948 + 5% ஜிஎஸ்டி ஆக ஒரு டோசின் விலை ₹995.40 |

| | | |
|---|---|---|
| | மருத்துவமனைகளுக்கு ஒரு டோஸுக்கு ₹1,200 ஆகவும் நிர்ணயித்துள்ளது. | |

**தடுப்பூசி போட்டுக் கொண்ட பிறகு சாதாரணமாக என்ன மாதிரியான பக்க விளைவுகள் ஏற்படும்?**

எல்லா மருந்துகளையும் போலவே இந்தத் தடுப்பூசியும் சில பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடும். ஊசி போட்டுக்கொண்ட எல்லோருக்குமே பக்க விளைவுகள் ஏற்படும் என்று சொல்ல முடியாது. பெரும்பாலான பக்க விளைவுகள் மென்மையானவையாக இருக்கும். ஒரு சில கொஞ்சம் கடுமையானவையாக இருக்கலாம். இவற்றை ஒரு சில நாட்களிலேயே சரி செய்து விடலாம். ஒரு சில பக்க விளைவுகள் ஒருவாரம் வரை கூட நீண்டு இருக்கக் கூடும். காய்ச்சல் அல்லது உடல் வலி நீடிக்குமானால் பாரசிட்டமால் மாத்திரை எடுத்துக் கொள்ளலாம்.

கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொண்டால் என்ன மாதிரியான பக்க விளைவுகள் ஏற்படும் என்பது மருத்துவ பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டன.

பத்துப்பேரில் ஒருவருக்கும் அதிகமானவரை பாதிக்கக் கூடும் பொதுவான பக்க விளைவுகள்

- ஊசி போட்ட இடம் மென்மையாகி விடுதல், வலி ஏற்படுதல், சூடாதல், அரிப்பு உணர்தல், சிராய்ப்பு ஏற்படுதல்
- உடல்நிலை சரியில்லாமல் இருப்பது போன்ற உணர்வு
- பெரும் சோர்வு
- உடல் குளிர்ந்து வருவது அல்லது காய்ச்சல் வருவது
- தலைவலி
- குமட்டல்
- மூட்டு வலி தசைப்பிடிப்பு (பத்தில் ஒருவருக்கு இது ஏற்படக்கூடும்)
- ஊசி போடப்பட்ட இடத்தில் வீக்கம், அந்தப்பகுதி சிவப்பாகி விடுதல், அல்லது இறுகிப்போதல்
- காய்ச்சல்
- வாந்தி அல்லது வயிற்றுப்போக்கு
- ஃப்ளூ காய்ச்சல் போன்ற அறிகுறிகள், அதிக ஜுரம், தொண்டை வலி, சளிப்பிடித்தல், இருமல் மற்றும் உடல் குளிர்ந்து வருதல்*

சாதாரணமாக காய்ச்சலுக்கு எடுக்கக்கூடிய பாராசிட்டமால் மாத்திரை எடுத்துக் கொண்டு நன்றாக ஓய்வெடுக்க வேண்டும்.

ஊசி போட்டுக்கொண்ட இரண்டு மூன்று நாட்களுக்கு காய்ச்சல் வருவது மாதிரி இருக்கும். ஆனால் வழக்கத்திற்கு மாறாக அதிக ஜீரம் வந்தால் அது கோவிட்-19 இருப்பதற்கான அறிகுறி அல்லது அது மறு தொற்றாக கூட இருக்கலாம்.

* ஊசி போட்டுக்கொண்ட அடுத்த நாள் உடல் குளிர்ந்து வந்ததாகவும், நடுக்கம் ஏற்பட்டதாகவும், ஜுரம் அதிகமானதாகவும். தலைவலி (ஒற்றைத்தலைவலியும் சேர்த்து), குமட்டல், தசைப்பிடிப்பு, உடல் வியர்த்தல் முதலியவற்றை உணர்ந்ததாகவும் சில பேர் தெரிவித்தார்கள். இது ஒன்றிரண்டு நாள் நீடிக்கும்.

அசாதாரணமாக நூற்றில் ஒருவரை பாதிக்கக் கூடியவை

- தலைச்சுற்றல்
- பசியின்மை
- வயிற்று வலி
- பெரிதாக்கப்பட்ட நிணநீர் முடிச்சுகள்
- அதிகப்படியாக வியர்த்தல், தோல் அரிப்பு அல்லது சொறி
- தீவிரமான அலர்ஜி (அனாஃபைலாக்சிஸ்) கூட ஏற்படலாம்

மருத்துவப் பரிசோதனைகளின் போது வேறு சில அனுபவங்களும் கண்டறியப்பட்டன. நரம்புகளில் வீக்கம் ஏற்பட்டதன் காரணமாக சில பகுதிகள் மரத்துப்போதல், உணர்ச்சி இழத்தல். ஊசி குத்துவது போன்ற உணர்வு என்பவை ஏற்படுவதாகச் சொல்லப்பட்டன. ஆனால் இவை தடுப்பூசி போட்டதன் காரணமாத்தான் ஏற்பட்டனவா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை

தடுப்பூசிகள் பரவலாக உபயோகத்திற்கு வந்த பின்னர் ரத்தம் உறைந்து கட்டிகள் ஏற்படுவது, ரத்தத்தில் பிளேட்லெட்டுகளின் எண்ணிக்கை குறைவது என சில அபூர்வமான நிகழ்வுகள் கவனத்திற்கு வந்தன.

உங்களுக்கு ஜுரம் அதிகமாக இருந்து அது இரண்டு மூன்று நாட்களுக்கு நீண்டு நிற்குமானால் அல்லது தொடர்ச்சியான அறிகுறிகள் இருக்குமானால் அவை தடுப்பூசி போட்டதன் பக்க விளைவுகள் அல்ல என்று அறிய வேண்டும். அந்த அறிகுறிகளின் தன்மையை அறிந்து அதற்கு தகுந்தபடி அறிவுரை பெற வேண்டும்.

*ஆதாரம்: என்.எச்.எஸ், இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம். கோவிஷீல்ட் தகவல் தாள், கோவேக்சின் தகவல் தாள், ஸ்புட்னிக் வி அறிவிப்புகள்*

**தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு உடலில் அங்கங்கே ரத்தம் உறைந்து கட்டியாகி விடுகிறது. இதனால் மக்கள் இறக்கிறார்கள். என் உயிருக்கே பங்கம் விளைவிக்கிற இந்தத் தடுப்பூசியை நான் ஏன் போட்டுக்கொள்ள வேண்டும்? கோவிஷீல்டு தடுப்பூசி போட்டுக்கொண்டால் ரத்த உறைவு ஏற்படுமா?**

கோவிஷீல்டு தடுப்பூசிக்கும், ரத்தம் உறைதலுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ரத்தம் உறைந்து கட்டியாவதும், அதனோடு ரத்தத்தில் உள்ள பிளேட்லட் எண்ணிக்கை குறைவதுமான சம்பவங்கள் மிக மிக அபூர்வமாகவே நடக்கின்றன. தடுப்பூசி போட்ட 14 நாட்களில் தான் இந்த மாதிரியான கேஸ்கள் கவனத்திற்கு வருகின்றன. சில சமயங்களில் இந்த காலகட்டத்தைத் தாண்டி வரும் நிகழ்வுகளும் உண்டு. சில நிகழ்வுகள் உயிருக்கே அபாயம் விளைவிக்கக் கூடியவையாக இருந்திருக்கின்றன. சில நிகழ்வுகள் மரணத்தில் கூட முடிந்திருக்கின்றன. ஒரு முக்கியமான விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். கோவிட்-19 என்கிற பெருந்தொற்றைத் தடுப்பதற்கான வழியாக இந்தத் தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் பெரும் பலன் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பெரும்பலனை அடையும்போது அதனோடே சில கடுமையான சிக்கல்களும் வரத்தான் செய்யும். இப்படிப்பட்ட பிரச்சினைகள் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்களுக்குக் கூட வரலாம். இது ஏன் சில குறிப்பிட்ட நபர்களை மட்டுமே பாதிக்கிறது என்பது குறித்து இன்னும் தெளிவு ஏற்படவில்லை.

தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு ரத்தப்போக்கு ஏற்படுவது, ரத்த உறைவு ஏற்படுவது குறித்த எல்லாப் பிரச்சினைகளையும் குறித்து இங்கிலாந்து பொது நலத்துறை (பி.எச்.இ) விரிவாக ஆய்வு செய்தது. அஸ்ட்ராஜெனெகாவின் கோவிஷீல்ட் தடுப்பூசியை முதல் டோஸாகப் போட்டுக் கொண்டவர்களுக்கு இது நிகழும் வாய்ப்பு அதிகமாக இருந்தது. இளவயதினருக்கு இதனுடைய பாதிப்பு கூடுதலாக இருப்பதும் கவனிக்கப்பட்டது. ஊசி போட்டுக் கொண்ட நான்கு நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் இது நடப்பதும் தெரிய வந்தது.

தடுப்பூசி போட்டுக்கொண்ட நான்கு நாட்கள் அல்லது நான்கு வாரங்களுக்குள் பின்வரும் தொந்தரவுகள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவேண்டும்.

- வழக்கமான வலி நிவாரணி மருந்துகளால் உதவாத அல்லது மோசமடைகிற ஒரு புதிய, கடுமையான தலைவலி,
- படுத்துக் கொண்டிருக்கும் போதும், குனியும் போதும் தலைவலி அதிகமாதல்,
- தலைவலி இருக்கும்போது கண் மங்கலாகத் தெரியும். குமட்டல் ஏற்பட்டு வாந்தி வருகிற மாதிரி இருக்கும். பேச்சு குளறும். பலவீனமாக உணர்தல் தலைச்சுற்றல், மயக்கம்,
- உடலில் ஆங்காங்கே ஊசி குத்துகிற மாதிரி இருக்கும். இரத்தப்போக்கு கூட ஏற்படலாம்,
- மூச்சுத்திணறல், நெஞ்சு வலி, காலில் வீக்கம் மற்றும் வயிற்று வலி.

*ஆதாரம்: இங்கிலாந்து பொதுநலத்துறை. கோவிஷீல்ட் தகவல் தாள்*

**கோவிஷீல்டு தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு ரத்தம் உறைவு ஏற்படுவது சாதாரணமாக நடப்பது தானா?**

இல்லை. இப்படி நடப்பது மிகவும் அபூர்வம். ரத்தம் உறைதலுக்கும் கோவிஷீல்டு தடுப்பூசிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை; இப்படி இரத்த உறைவு ஏற்படுவதும், அந்த சமயத்தில் ரத்தத்திலுள்ள பிளேட்லெட்டுகளின் எண்ணிக்கை குறைவதுமான சம்பவங்கள் மிகவும் குறைவாகத்தான் நிகழ்கின்றன. பத்து லட்சம் தடுப்பூசிகள் போட்டால் சுமார் நான்கு நபர்களுக்கு மட்டுமே இது ஏற்படுகிறது.

*ஆதாரம்: இங்கிலாந்து பொதுநலத்துறை. கோவிஷீல்ட் தகவல் தாள்*

**தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு பக்க விளைவுகள் ஏற்பட்டால் நான் எப்போது உதவியை நாட வேண்டும்?**

தடுப்பூசி போட்டுக்கொண்ட நான்கு நாட்களுக்குப் பிறகு உங்களுக்கு கீழ்க்கண்ட உபாதைகள் ஏதேனும் ஏற்பட்டால் உடனே மருத்துவ உதவியை நாடவேண்டும்.

- கடுமையான தலைவலி.. வலி நிவாரணி மாத்திரை எடுத்துக்கொண்ட பிறகும் குணமாகாத தலைவலி. படுத்துக்கொண்டிருக்கும்போதோ, கீழே குனியும்போதோ அதிகமாகும் தலைவலி,
- தலைவலி இருக்கும்போதே கண் மங்கலாக தெரிதல், மனதில் குழப்பம், பேச்சுக்குளறுதல், பலவீனமாக உணர்தல், மயக்கம் வருவது போன்ற உணர்வு, வலிப்பு வருதல்
- மூச்சுத்திணறல், நெஞ்சு வலி, காலில் வீக்கம் அல்லது தீராத வயிற்று வலி

முதலாவது கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு உங்களுக்கு ரத்த உறைவு ஏற்பட்டாலோ, உங்களது ரத்தத்தில் பிளேட்லெட் எண்ணிக்கை குறைந்தாலோ அதை உங்கள் மருத்துவரிடமோ அல்லது செவிலியரிடமோ சொல்லுங்கள்.

*ஆதாரம்: இங்கிலாந்து பொது நலத்துறை. கோவிஷீல்ட் தகவல் தாள்*

**எந்தக் காரணத்தைக் கொண்டும் தடுப்பூசி போட்டுக்கொள்ளக் கூடாது என்று யாரெல்லாம் விலக்கப்பட்டிருக்கிறார்கள்? தடுப்பூசியை யார் முற்றிலும் எடுக்கக்கூடாது?**

கீழ்க்கண்டவர்கள் தடுப்பூசி எடுத்துகொள்ளக்கூடாது

- ஒரு தடுப்பூசியில் பல மூலப்பொருட்கள் அடங்கியிருக்கின்றன. அந்த பொருட்களில் ஏதாவது ஒன்று அலர்ஜி காரணமாக உங்கள் உடம்போடு ஒத்துப் போகாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் தடுப்பூசி எடுத்துக்கொள்ளக்கூடாது,

- கோவிட்-19 தடுப்பூசி எடுத்துக்கொண்ட பிறகு இரத்த உறைவு ஏற்பட்டு அதோடு கூட ரத்தத்தில் பிளேட்லெட் எண்ணிக்கை குறைதல்- இந்த அனுபவம் உள்ளவர்கள்.
- ஹெபேரினால் தூண்டப்பட்ட த்ரோம்போசைட்டோபீனியா என்னும் நிலை உங்களுக்கு ஏற்பட்டிருந்தாலும். அதனால் ரத்த உறைவு (த்ரோம்போசிஸ்) நிகழ்ந்திருந்தாலும் நீங்கள் தடுப்பூசி எடுத்துக்கொள்ளக்கூடாது.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம். என்.எச்.எஸ், கோவிஷீல்ட் தகவல் தாள், கோவேக்சின் தகவல் தாள், ஸ்புட்னிக் வி அறிவிப்புகள்*

**நான் என் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாமா?**

கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.இ.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பரிந்துரைகளின்படி தாய்ப்பால் கொடுத்துக் கொண்டிருக்கும் தாய்மார்களும் கோவிட்-19 தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். எனினும் கர்ப்பிணிகள் கோவிட்-19 போட்டுக்கொள்ளலாமா என்கிற விஷயம் பற்றி இன்னும் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், கோவிட்-19 தடுப்பூசி குறித்த என்இஜிவிஏசி-யின் புதிய பரிந்துரைகள் பற்றிய பிஐபி செய்திக்குறிப்பு*

**நான் தற்போது கர்ப்பமாக இருக்கிறேன். நான் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாமா?**

கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பரிந்துரைகளின்படி தாய்ப்பால் கொடுத்துக் கொண்டிருக்கும் தாய்மார்களும் கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். எனினும் கர்ப்பிணிகள் கோவிட்-19 போட்டுக்கொள்ளலாமா என்கிற விஷயம் பற்றி இன்னும் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், கோவிட்-19 தடுப்பூசி குறித்த என்இஜிவிஏசி-யின் புதிய பரிந்துரைகள் பற்றிய பிஜபி செய்திக்குறிப்பு*

**கோவிட்-19 தொற்றிலிருந்து குணமான ஒருவர் கோவிட்-19 தடுப்பூசி அவசியம் எடுத்துக்கொள்ள வேண்டுமா?**

கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.இ.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி சார்ஸ் கோவி-2 கோவிட்-19 தொற்று இருக்கிறது என்று லேப் சோதனைகளின் மூலம் முழுமையாக நிரூபிக்கப்பட்ட எந்தத் தனி நபரும் அவர் குணமான காலத்திற்குப் பிறகு தடுப்பூசி எடுத்துக் கொள்வதை மூன்று மாதம் தள்ளி போட வேண்டும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், கோவிட்-19 தடுப்பூசி குறித்த என்இஜிவிஏசி-யின் புதிய பரிந்துரைகள் பற்றிய பிஜபி செய்திக்குறிப்பு*

**நாள்பட்ட நோய் இருப்பவர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியுமா?**

இருதய, நரம்பியல், நுரையீரல், வளர்சிதை மாற்ற, சிறுநீரக மற்றும் புற்றுநோய் போன்ற நாள்பட்ட நோய்களுக்கு தடுப்பூசி முரணாக இல்லை. சொல்லப்போனால் கோவிட்-19 தடுப்பூசி கொரோனா தொற்றின் தீவிரத்தைக் குறைக்கிறது. அதனால் மரணம் ஏற்படுவதையும் தவிர்க்கிறது. மேலே சொல்லப்பட்ட நாள்பட்ட நோய்கள் இருப்பவர்களுக்கும் இது பொருந்தும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்*

**நாம் ஏற்கனவே வேறு நோய்க்கு மருந்துகள் ஏதாவது எடுத்துக் கொண்டிருந்தால் கோவிட்-19 தடுப்பூசி போட்டுக் கொள்வதற்காக அவற்றை நிறுத்த வேண்டுமா?**

அப்படிப்பட்ட அறிவிப்புகள் ஏதும் இதுவரை வரவில்லை. ஏற்கனவே எடுத்துக்கொண்டிருக்கும் மருந்துகளைத் தொடர்ந்து எடுப்பதில் ஏதும் தடையில்லை. நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் மருந்துகளைப் பற்றிய விவரங்களை தடுப்பூசி போடுபவர்களிடம் தெரிவித்து விடுங்கள்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்*

**புற்றுநோய், நீரிழிவு நோய் (சர்க்கரை நோய்), ரத்த அழுத்த நோய் உள்ள ஆணோ பெண்ணோ இந்த நோய்களுக்கு மருந்து எடுத்துக் கொண்டிருக்கும் போது கோவிட்-19 தடுப்பூசி எடுத்துக்கொள்ள முடியுமா? எனக்கு ரத்த அழுத்தம், நீரிழிவு நோய், சிறுநீரக நோய், இதயநோய், அதிக கொழுப்புச் சத்து, கொழுப்பு சத்து குளறுபடிகள் என ஏதாவது நோய்கள் இருக்கும் பட்சத்தில் இந்த தடுப்பூசியைப் போட்டுக் கொள்வது பாதுகாப்பாக இருக்குமா?**

போட்டுக்கொள்ளலாம். மேற்கூறிய நோய்களில் ஒன்று அல்லது அதற்கு அதிகமாகவோ இருப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையும். கவனமும் பெற வேண்டிய வகையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நிச்சயம் கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.. ஏதாவது இணைநோய் உள்ள பெரியவர்களுக்கு இந்த தடுப்பூசி பாதுகாப்பையும், பலனையும் தரும். இணை நோய் உள்ளவர்கள் தான் கோவிட்-19 தடுப்பூசியின் மூலம் அதிக பலனைப் பெறுகிறார்கள். குறிப்பிட்டவைக்கும் மேல் நீங்கள் வேறு ஏதாவது குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் உங்கள் மருத்துவரைக் கேளுங்கள்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்*

**என் தாயாருக்கு மூன்று வருடங்களுக்கு முன்னால் காலில் ரத்த உறைவு (டிவிடி) ஏற்பட்டது. அதற்காக இப்போது ரத்த இளக்கி மருந்துகளை எடுத்து வருகிறார். அவர் இப்போது தடுப்பூசி எடுத்துக்கொள்ள முடியுமா?**

எடுத்துக்கொள்ளலாம். நாள்பட்ட இரத்த உறைவு உபாதை இருப்பவர்கள் தடுப்பூசி எடுத்துக்கொள்வதற்கு எந்தத் தடையும் இல்லை. ரத்த இளக்கி மருந்து எடுப்பவர்களும் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். இருந்தாலும் தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு முன்னால் அந்த மருந்துகளைப் பற்றி ஊசி போடுபவரிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுங்கள்.

நாள்பட்ட இரத்த உறைவு பிரச்சினைகள் உள்ள நபர்கள் அதன் காரணமாக மிகுந்த முன்னெச்சரிக்கையோடு இருப்பவர்கள் அஸ்ட்ராஜெனேகா (கோவிட்ஷீல்டு) தடுப்பூசி போட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உருவாவதில் பிரச்சனை ஏதும் வந்ததாகத் தகவல் இல்லை என்று இங்கிலாந்திலுள்ள ரத்தவியல் (ஹெமடாலஜி) நிபுணர் குழு தெரிவித்தது.

*ஆதாரம்: ரத்தவியல் (ஹெமடாலஜி) நிபுணர் குழு, இங்கிலாந்து*

**எனது தகப்பனார் சமீபத்தில் தான் கோவிட் தொற்றிலிருந்து மீண்டார். அவருக்கு பிளாஸ்மாவும், ஸ்டெராயிடும் கொடுத்திருந்தார்கள். அவர் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாமா?**

கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி மோனோக்ளோனல் ஆன்டிபாடி அல்லது பிளாஸ்மா கொடுக்கப்பட்டு சிகிச்சை பெற்ற கோவிட்-19 நோயாளிகள் தடுப்பூசி போட்டுக்கொள்வதை அவர்கள் மருத்துவமனையிலிருந்து வெளியே வந்த தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு தள்ளிப்போட வேண்டும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், கோவிட்-19 தடுப்பூசி குறித்த என்இஜிவிஏசி-யின் புதிய பரிந்துரைகள் பற்றிய பிஐபி செய்திக்குறிப்பு*

**நான் சைவ உணவுப் பழக்கம் கொண்டவன். இந்தத் தடுப்பூசியில் முட்டை அல்லது மாட்டிறைச்சி போன்ற விலங்குப் பொருட்கள் கலந்திருக்கின்றனவா?**

அங்கீகரிக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசிகளில் எந்த விலங்கு பொருட்களும் அல்லது முட்டைகளும் இல்லை.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், கோவிஷீல்ட் தகவல் தாள், கோவேக்சின் தகவல் தாள், ஸ்புட்னிக் வி அறிவிப்புகள்*

**நான் ஒரு முஸ்லிம். இந்த தடுப்பூசியைப் போட்டுக் கொள்வதை எனது மதம் அனுமதிக்கிறதா எனத் தெரியவில்லை. ரமதான் மாதத்தில் நோன்பு இருக்கும் போது நான் இந்த கோவிஷீல்டு தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளலாமா?**

கோவிஷீல்டு தடுப்பூசி போட்டுக் கொள்வதன் மூலம் நோன்பு கடைப்பிடிப்பதற்கு பங்கம் ஏற்படாது என்று இஸ்லாமிய அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரமதான் காரணமாக எந்த ஒரு தனி நபரும் கோவிட் தடுப்பூசி போட்டுக் கொள்வது தாமதப்படுத்தக் கூடாது. தோலுக்கு அடியிலும், தசைகள் வழியாகவும், நரம்பு வழியிலும், எலும்பு மூட்டுகளுக்குள்ளும் செலுத்தப்படுகின்ற ஊசிகள் உணவுப்பொருளாகக் கருதப்படாமல் மருந்தாக மட்டும் கருதப்படுவதால் அவை நோன்பிற்கு பங்கமாக கருதப்படாது. இந்த மருந்து ரத்தத்தில் கலந்தாலும் அதில் தவறில்லை. நோன்பிற்கு பங்கம் விளைவிப்பதாகக் கருதப்படும் எந்த வகையிலும் இந்த மருந்துகள் வராது. இப்போது கிடைக்கும் கோவிட்-19 தடுப்பூசி தசை வழியாக செலுத்தப்படுகிறது. இதனால் ரமதான் நோன்பிற்கு எந்தப் பங்கமும் இல்லை..

'ரஷ்ய முஸ்லிம்கள் ஸ்புட்னிக் வி தடுப்பூசி போட்டுக் கொள்வது அவர்களது மத நம்பிக்கையை எந்த வகையிலும் தடுக்கவில்லை' என்று ரஷிய உலெமா குழுமம் 2021 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் நாள் உறுதி செய்தது. கோவிட்-19 தடுப்பூசியில் அடங்கியிருக்கும் இரண்டு மூலப்பொருட்களை எடுத்துக்கொண்டு அவை இஸ்லாமிய

ஷாரியா மரபுகளுக்கு ஏற்புடையவை தான் என்று அறிந்த பின்னரே இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

*ஆதாரம்: பிரித்தானிய இஸ்லாமிய மருத்துவக் கழகம், இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கான ரஷிய உலெமாக் குழுமம்.*

**யார் கோவிட் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளக் கூடாது? (உடல் ஒவ்வாமை கொண்டவர்கள்)**

1 தடுப்பூசி போடுவதை தவிர்க்க வேண்டியவர்கள்

- ஏற்கனவே ஏதாவது அலர்ஜி தொந்தரவு இருந்தால் அல்லது முதல் டோஸ் கோவிட்-19 தடுப்பூசி போட்டுக் கொண்ட பின் ஏதேனும் அலர்ஜி தொந்தரவு அனுபவித்தவர்கள்,
- நோய்களுக்கான ஊசியோ அல்லது தடுப்பூசியோ போட்டுக்கொண்ட போதோ, சில குறிப்பிட்ட மருந்துகளை உட்கொண்ட போதோ, சில உணவு வகைகளைச் சாப்பிட்ட போதோ சிலருக்கு அலர்ஜி ஏற்பட்டிருக்கலாம். அந்த அலர்ஜி உடனடியாகவும் வந்திருக்கலாம். சிறிது காலம் கழித்தும் வந்திருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளக்கூடாது.

மேற்கண்டவர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளக் கூடாது.

2 கர்ப்ப காலமும், தடுப்பூசியும்

- கோவிட்-19 தொற்றுக்கு தடுப்பூசியை செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.இ.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. கர்ப்பிணிகள் கோவிட்-19 போட்டுக்கொள்ளலாமா என்கிற விஷயம் பற்றி இன்னும் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், கோவிட்-19 தடுப்பூசி குறித்த என்இஜிவிஏசி-யின் புதிய பரிந்துரைகள் பற்றிய பி.ஐ.பி செய்திக்குறிப்பு*

3 தாற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ தடுப்பூசி ஒத்துக்கொள்ளாதவர்கள்

கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.இ.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த

பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி:

- முறையான பரிசோதனைகளின்படி ஒரு நபருக்கு சார்ஸ் கோவி-2 தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டிருந்தால் அவர் கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்வதை மூன்று மாதம் தள்ளிப்போட வேண்டும்,
- கோவிட்-19 தொற்று ஏற்பட்ட நோயாளிகளுக்கு சார்ஸ் கோவி-2 எதிர்ப்பு மருந்தோ (மோனோக்ளோனல் ஆன்டிபாடி) அல்லது பிளாஸ்மா சிகிச்சையோ கொடுக்கப்பட்டிருந்தால் தடுப்பூசி போட்டுக்கொள்வதை அவர்கள் மருத்துவமனையிலிருந்து வெளியே வந்ததற்குப் பிறகு மூன்று மாதங்களுக்கு ஒத்திப்போட வேண்டும்,
- கோவிட்-19 தடுப்பூசியின் முதல் டோஸைப் போட்டுக்கொண்ட ஒரு நபர், இன்னும் இரண்டாவது டோசை எடுக்காதிருந்து, இந்த இடைக்காலத்தில் அவருக்கு கோவிட்-19 தொற்று ஏற்படுகிறது என்றால் அப்படிப்பட்டவர் தொற்றிலிருந்து முழுமையாகக் குணமடைந்து மூன்று மாதம் ஆகிற வரை இரண்டாவது டோஸ் தடுப்பூசி எடுப்பதைத் தள்ளிப்போட வேண்டும்,
- மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற வேண்டிய நிலையிலோ, அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட வேண்டிய நிலையிலோ இருக்கிற ஏதாவது கடுமையான நோய் பாதிப்பு உள்ளவர்கள் நான்கு முதல் எட்டு வாரங்கள் வரை காத்திருந்து பிறகு கோவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம். என்.எச்.எஸ், கோவிஷீல்ட் தகவல் தாள், கோவேக்சின் தகவல் தாள், ஸ்புட்னிக் வி அறிவிப்புகள், கோவிட்-19 தடுப்பூசி குறித்த என்.இ.ஜி.வி.ஏ.சி-யின் புதிய பரிந்துரைகள் பற்றிய பி.ஐ.பி செய்திக்குறிப்பு*

**நான் கோவிட் தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு பதிவு செய்திருக்கிறேன். இப்போது எனக்கு கோவிட் தொற்று இருப்பது உறுதியாகியிருக்கிறது. நான் தடுப்பூசி எடுத்துக்கொள்ளலாமா?**

கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.இ.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி எந்தத் தனி நபருக்கும் முறையாகச் சோதனை செய்யப்பட்டு சார்ஸ் கோவி-2 கோவிட்-19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டால் அப்படிப்பட்டவர்கள் குணமான நாளிலிருந்து மூன்று மாதங்கள் தடுப்பூசி போட்டுக் கொள்வதை தள்ளிப் போட வேண்டும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், கோவிட்-19 தடுப்பூசி குறித்த என்.இ.ஜி.வி.ஏ.சி-யின் புதிய பரிந்துரைகள் பற்றிய பி.ஐ.பி செய்திக்குறிப்பு*

**நான் தடுப்பூசி முதல் டோஸ் போட்டுக்கொண்ட பின் எனக்கு கோவிட் தொற்று வந்தது. இப்போது நான் இரண்டாவது டோஸ் எடுத்துகொள்ளலாமா அல்லது மீண்டும் இரண்டு டோஸ்களையும் எடுத்துக்கொள்ள வேண்டுமா?**

கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.இ.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி எந்தத் தனி நபருக்கும் முதல் டோஸ் போட்டுக் கொண்ட பிறகு தொற்று ஏற்பட்டால் அவர் இரண்டாவது டோஸ் போட்டுக் கொள்வதை அவர் தொற்றிலிருந்து குணமான நாளிலிருந்து மூன்று மாதங்கள் தள்ளி போட வேண்டும்.

*ஆதாரம்: இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம், கோவிட்-19 தடுப்பூசி குறித்த என்.இ.ஜி.வி.ஏ.சி-யின் புதிய பரிந்துரைகள் பற்றிய பி.ஐ.பி செய்திக்குறிப்பு*

**கோவிட் தடுப்பூசியின் விலை என்ன?**

மத்திய அரசு கோவிஷீல்ட் மற்றும் கோவேக்சின் தடுப்பூசிகளை ஒவ்வொரு டோஸுக்கும் 150 ரூபாய் கொடுத்து மொத்தமாகக் கொள்முதல் செய்கிறது. அரசு மருத்துவமனைகளில் இந்தத் தடுப்பூசி இலவசமாக போடப்படுகிறது

ஏப்ரல் 21-ம் தேதி சீரம் நிறுவனம் கோவிஷீல்டுக்கு மாநில அரசுகளுக்கு ஒரு டோஸுக்கு 400 ரூபாயும் தனியார் மருத்துவமனைகளுக்கு ஒரு டோஸுக்கு 600 ரூபாயும் நிர்ணயம் செய்தது

பாரத் பயோடெக் நிறுவனம் கோவேக்சின் தடுப்பூசிக்கு ஏப்ரல் 25 ஆம் தேதியின் நிலவரப்படி மாநில அரசுகளுக்கு ஒரு டோஸுக்கு 600 ரூபாயும், தனியார் மருத்துவமனைகளுக்கு ஒரு டோஸுக்கு 1200 ரூபாயும் நிர்ணயம் செய்திருக்கிறது.

ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் ஒரு டோசுக்கான அதிகபட்ச சில்லறை விலை ரூ. 948. இதனோடு ஜிஎஸ்டி 5% சேர்த்தால் 995.40 ஆகும்.

**தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு பதிவு செய்வது எப்படி?**

கோ-வின் என்றொரு தகவல் தளம் இருக்கிறது. கணிணியில் https://www.cowin.gov.in/home என்ற இணையத்தளத்திற்குப்போய் உங்கள் பெயரைப் பதிவு செய்யலாம்.

**தடுப்பூசி போட்டுக் கொள்ள தகுதி உள்ளவர்கள் என்னென்ன ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்?**

புகைப்படத்துடன் கூடிய கீழே குறிப்பிட்டுள்ள ஏதாவது ஒரு அடையாள அட்டையை பதிவு செய்யும் சமயத்தில் சமர்ப்பிக்க வேண்டும்,

- ஆதார் அட்டை
- ஓட்டுநர் உரிமைப்பத்திரம் (டிரைவிங் லைசென்ஸ்)
- தொழிலாளர் அமைச்சகத்தின் கீழ் வழங்கப்படும் மருத்துவ காப்பீடு மின்னணு அட்டை ( ஸ்மார்ட் கார்டு)
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் (எம்ஜிஎன்ஆர்இஜிஏ) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பணி அட்டை
- பாராளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பி)/ சட்டமன்ற உறுப்பினர்கள் (எம்எல்ஏ/ மேலவை உறுப்பினர்களுக்கு (எம்.எல்.சி) வழங்கப்படும் அதிகாரபூர்வமான அடையாள அட்டை
- வருமானத்துறையின் நிரந்தரக்கணக்கு எண் (பேன் கார்டு) அட்டை
- வங்கிகள் மற்றும் தபால் அலுவலகங்களால் வழங்கப்பட்ட கணக்குப்புத்தகம்
- கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்)
- ஓய்வூதிய ஆவணம்
- மத்திய,மாநில அரசு ஊழியர்களுக்கும், பொதுத்துறை ஊழியர்களுக்கும் வழங்கப்படும் பணி அடையாள அட்டை
- வாக்காளர் அடையாள அட்டை
- இணைநோய் இருப்பவர்கள் அந்த இணை நோய் பற்றிய விவரங்களை இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் நிறைவு செய்து அதில் ஒரு பதிவு செய்யப்பட்ட மருத்துவர் கையொப்பம் பெற்று அதை சமர்ப்பிக்க வேண்டும்.

*ஆதாரம்: கோ-வின், இந்திய அரசின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்.*

**கோவிட் தடுப்பூசி குறித்து பல வதந்திகளும், கட்டுக்கதைகளும் நிலவுகின்றன. அவை பற்றிய உண்மையான தகவல்கள் கீழே தரப்படுகின்றன**

**கட்டுக்கதை:** இந்தியாவில் கிடைக்கும் தடுப்பூசிகள் பெண்கள் கருவுறுதலை பாதிக்கும்.

**உண்மை:** கோவிட் -19 தடுப்பூசி எந்த வகையிலும் பெண்கள் கருவுறுதலை பாதிக்காது. கோவிஷீல்ட், கோவேக்சின் முதலிய தடுப்பூசிகள் ஆண்களுக்கோ, பெண்களுக்கோ மலட்டுத்தன்மையை உருவாக்கும் என்று சொல்வதற்கு விஞ்ஞானபூர்வமாக எந்த ஆதாரமும் இல்லை என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ்வர்தன் கூறியிருக்கிறார்.

அதற்கு மாறாக கோவிட்-19 தொற்று ஏற்பட்டால் அது தாயின் ஆரோக்கியத்திலும், அவளது கர்ப்ப காலத்திலும் பல கடுமையான பின்விளைவுகளை உண்டாக்கும்.

**கட்டுக்கதை:** தடுப்பூசிகளான கோவிஷீல்ட் மற்றும் கோவேக்சின் மூலமாகவும் கோவிட்-19 தொற்று ஏற்படலாம்.

**உண்மை:** தடுப்பூசிகள் மூலம் உங்களுக்கு கோவிட் தொற்று ஏற்படாது. கோவிட்-19 தொற்றை ஏற்படுத்தக்கூடிய எந்த உயிருள்ள தீநுண்மி(வைரஸ்)யையும் இந்திய தடுப்பூசிகள் பயன்படுத்துவதில்லை. தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனங்கள் எல்லாம் விஞ்ஞான முறைகளைத்தான் பயன்படுத்துகின்றன. மனித உடலுக்குள் செத்துப்போன வைரஸ் அல்லது தீங்கு தராத வைரஸ் ஒன்றைச் செலுத்தி அந்த வைரசின் குணங்களைக் கண்டுபிடித்து அதோடு போராடி பிறகு அதை அழிப்பதற்கான வழி முறைகளைக் கண்டுபிடிக்கிறார்கள்.

ஆனால் நீங்கள் தடுப்பூசி போட்டுக் கொண்டதற்கு பிறகு கூட உங்களுக்கு தொற்று ஏற்படலாம். அது இருப்பதற்கான அறிகுறிகள் கூட உங்களுக்குத் தெரியாது.

தடுப்பூசி போட்டுக் கொண்ட பிறகு லேசாக ஜுரம் வரலாம். அது இரண்டு மூன்று நாட்களில் போய்விடும். இந்த ஜுரத்தை கோவிட்-19 தொற்று அறிகுறியாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

**கட்டுக்கதை:** எனக்கு ஏற்கனவே கோவிட்-19 தொற்று வந்து சரியாகி விட்டது. நான் தடுப்பூசி எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

**உண்மை:** கோவிட் -19 தொற்றுக்கு தடுப்பூசி செலுத்துவது தொடர்பான நெறிமுறைகளைப் பற்றி தேசீய வல்லுநர் குழு (என்.இ.ஜி.வி.ஏ.சி) 19/05/2021 அன்று

சமர்ப்பித்த பரிந்துரைகளை மத்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதன்படி எந்தத் தனி நபருக்கும் முறையாக சோதனை செய்யப்பட்டு சார்ஸ் கோவி-2 கோவிட்-19 தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டால் அப்படிப்பட்டவர்கள் குணமான நாளிலிருந்து மூன்று மாதங்கள் தடுப்பூசி போட்டுக் கொள்வதை தள்ளிப் போட வேண்டும்.

**கட்டுக்கதை:** பெண்கள் மாதவிலக்கு காலங்களில் கோவிட் 19 தடுப்பூசி எடுத்துக்கொள்வது பாதுகாப்பானதில்லை.

**உண்மை:** கோவிட் 19 தடுப்பூசியின் செயல்பாட்டுக்கு மாதவிலக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

**கட்டுக்கதை:** நான் தடுப்பூசி போட்டுக்கொண்ட உடனே எனக்கு கோவிட் தொற்றிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும்

**உண்மை:** தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் போட்டுக்கொண்டு இரண்டு வாரம் கழித்து தான் பாதுகாப்பு தரும் நோய் எதிர்ப்பு அம்சங்கள் (ஆன்டிபாடி) உருவாகும்.

**கட்டுக்கதை:** நான் கோவிட்-19 தடுப்பூசி போட்டுக் கொண்டு விட்டேன். இனி முகக்கவசம் அணிய வேண்டியதில்லை. கொரோனா வைரஸ் பற்றிய எந்த முன்னெச்சரிக்கையையும் கடைப்பிடிக்கத் தேவையில்லை.

**உண்மை:** கோவிட்-19 தடுப்பூசி போட்டுக் கொண்டிருக்கும் எந்தத் தனி நபரும் தொடர்ந்து தொற்று நோய் தடுப்பு முன்னெச்சரிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். எப்போதும் முகக்கவசம் அணிந்திருங்கள். வீட்டை விட்டு வெளியே வரும்போது சமூக இடைவெளி ஆகிய ஆறு அடி தூரம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். மறு அறிவிப்பு வரும் வரை இவற்றைக் கடைப்பிடிப்பது அவசியம். கொரோனா தீநுண்மி (வைரஸ்) உங்கள் உடம்புக்குள் நுழைவதை தடுப்பூசி தடுக்காது; உடலுக்குள் நுழைந்த வைரசின் பாதிப்பு மேலும் மேலும் கடுமையாகாமலிருப்பதற்கு மட்டுமே தடுப்பூசி உதவுகிறது. தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களிடம் இன்னும் அந்த தீநுண்மி (வைரஸ்) இருக்குமா அவர்களுக்கு பாதிப்பு இல்லையென்றாலும் அந்த வைரசை அவர்கள் பிறருக்குப் பரப்புவார்களா என்பது குறித்து இன்னும் தெளிவில்லாமல் இருக்கிறது.